## தலைப்பு 005 – அமைச்சரவை அலுவலகம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 005 – அமைச்சரவை அலுவலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அமைச்சரவை அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 10 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சரவை அலுவலகத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அமைச்சரவை அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சரவை அலுவலகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சரவை அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

**2.1.1 நிதியேற்பாட்டின் பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் இயலுமானவரை முழுமையாகவும், சிக்கனமாகவும் தயாரித்தல் மற்றும் செயற்திறனாகவும் கவனத்தில் கொண்டு மதிப்பீடு தயாரிக்காமையின் காரணமாக மீளாய்வாண்டில் ரூபா 85,000,000 ஆன மதிப்பீடு செய்யப்பட்ட மூலதன நிதியேற்பாட்டில் ரூபா 66,709,685 அதாவது 78 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | கட்டிடத்தின் பழுது பார்த்தல் நடவடிக்கைகள் கடற்படையின் பொறியியல் சேவையின் படையணி ஊழியப் பங்களிப்பின் அடிப்படையிலும் திறந்த சந்தையில் ஆகக் குறைந்த விலையின் கீழ் கட்டிடப் பொருட்களும் கொள்வனவு செய்யப்பட்டு பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டது. சூரிய கல பற்றரி முறைமை வழங்குவதற்குரிய பெறுகை நடவடிக்கைகளை வழங்காமைக்கு தீர்மானம் எடுத்தமையால் மூலதன ஏற்பாட்டின் சேமிப்புக்கு காரணமாக இருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் முழுமையாகவும், சிக்கனமாகவும் மற்றும் செயற்திறனான வகையில் கவணத்தில் கொண்டு மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஏனைய செலவினம் மற்றும் பதவியணியினர் பயிற்சி செலவினத்திற்காக கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு 200 சதவீதம் படி அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த செலவின விடயத்தின் நிதியேற்பாட்டின் சேமிப்பு முறையே ரூபா 489,582 அதாவது 82 சதவீதம் ரூபா 1,096,695 அதாவது 73 சதவீதம் ஆனமையால் மதிப்பீடு தயாரித்தல் சரியாக எதிர்வு கூறப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வுடன் இணங்குவதுடன் அத்தியாவசியமாக எழுந்த விடயங்களை வழங்குதலின் தேவைக்காக மாத்திரம் இந்த நிதியேற்பாடு பயன்படுத்தியமை மற்றும் பதிவியணியினர் பயிற்சி வரையறுக்கப்பட்டதன் காரணமாக நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | சரியான மதிப்பீட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மின்சாரம் மற்றும் நீர் செலவினத்திற்காக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் முறையே 675 சதவீதம் அதிகரிப்பும் மற்றும் 25 சதவீதம் குறைத்தும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் போது அந்த செலவின விடயத்துக்காக நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் ரூபா 2,500,000 நிதியேற்பாடு மாற்றப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதியில் மேலும் ரூபா 229,561 தொகை தீர்த்துக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | கணக்காய்வுடன் இணங்குவதுடன் புதிய கட்டிடத்தின் மின்பாரந்தூக்கியின் செயற்பாடுகள், மத்திய மயப்படுத்தப்பட்ட வளிப்பதனாக்கி முறைமைக்காக செலவாகும் என்ற எதிர்பார்ப்பில் மின்சாரம் மற்றும் நீர் செலவினங்கள் தொடர்பாக கவனத்தில் கொண்டு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த செலவினங்கள் உயர்வடைந்து சென்றிருந்தது. | சரியாக மதிப்பீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | உணவு, பாணம் மற்றும் சீருடைகளுக்காக கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது முறையே 8 சதவீத குறைவும் மற்றும் 50 சதவீதம் அதிகரித்தும் நிதியேற்பாடு மதிப்பீடு | நாட்டில் காணப்பட்ட அதிக பணவீக்க நிலைமையின் கீழ் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் செலவினங்கள் உச்ச அளவில் வரையறுக்கப்பட்டதன் காரணமாக நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | சரியாக மதிப்பீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அந்த மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் 85 சதவீதம் ரூபா 2,561,614 சேமிக்கப்பட்டிருந்தது. இந்த சேமிப்புக் காரணமாக காண்பிக்கப்பட்ட 01/2023, 03/2022 மற்றும் 08/2022 என்ற வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியேற்பாட்டை நிறுத்தி வைத்தல் மற்றும் செலவினங்களை வரையறுத்தல் என்பன கணக்காய்வில் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரிக்கு அறிக்கையிடப்படாத எந்தவொரு கடப்பாடோ அல்லது பொறுப்பொன்றோ, முன்னைய ஆண்டின் செவினமாக 2024 ஆம் ஆண்டில் தீர்த்து வைக்க முடியாதிருந்த போதிலும் திறைசேரியால் விநியோகிக்கப்படுகின்ற கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் உள்ளடக்கப்படாத மீளாய்வாண்டுக்குரிய ரூபா 229,561 ஆன மின்சார செலவினம், 2024 ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. மேலும் இந்தப் பொறுப்புக்களை தீர்த்து வைப்பதற்காக தேவையான போதியளவான நிதியேற்பாடு 2023 ஆம் ஆண்டில் அந்த செலவின விடயத்தில் சேமிக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வுடன் இணங்குவதுடன் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் நீர் மின்சார பட்டியல்களின் பெறுமதி அதிகரித்ததன் காரணமாக பட்டியல்களை தீர்த்து வைப்பதற்கு நிதியேற்பாடு போதியளவில் காணப்படவில்லை. | ஆண்டுக்குரிய சகல பொறுப்புக்களும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

**அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் | பெறுமதி ரூபா | இணங்காமைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | | |
| (i) நிதிப்பிரமாணம் 156(5) | 127,113 | உறுதிச்சீட்டுக்களில் ஏதாவது தவறொன்றை சரி செய்வதற்கு தேவையான விடத்து அந்தத் தவறை தனி ஒரு கோட்டினால் வெட்டி சிற்றொப்பம் இடவேண்டியிருந்த போதிலும் விசேட ஊக்குவிப்புப் படி செலுத்தும் உறுதிச்சீட்டில் இலக்கத்தால் எழுதப்பட்ட தொகை சரி செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் எழுத்தினால் எழுதப்பட்ட தொகை சரி செய்து சிற்றொப்பம் இடப்பட்டிருக்கவில்லை. | தவறினால் கையெழுத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை பதிவழிக்கப்பட வில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) நிதிப்பிரமாணம் 232(2) மற்றும் 248(2) | 4,317,969 | உறுதிச்சீட்டில் உள்ளடக்கபட்ட பட்டோலைகளின் தகவல்கள் பூர்த்தி செய்ய வேண்டியிருந்ததுடன் பட்டோலைகளும் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் 20 உறுதிச்சீட்டுக்களின் பட்டோலைகள் பூர்த்தி செய்யதல் மற்றும் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வுடன் இணங்குவதுடன் எதிர்காலத்தில் சரியான தகவல்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் உறுதிச்சீட்டுக்கள் மற்றும் பட்டோலைகள் பூர்த்தி செய்து உறுதிப்படுத்தப்படல் வேண்டும். |

## 2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2023 யூன் 27 ஆம் திகதி இலக்கம் 279 மற்றும் 280 என்ற உறுதிச்சீட்டுக்கள் மூலம் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் உபசரிப்பு நடவடிக்கைகளுக்காக பெறப்பட்ட முற்பணத்தை தீர்க்கும் போது கூட்டுமொத்தமாக ரூபா 4,000 பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | பட்டியல்களின் மூலப் பிரதிகள் தொலைந்தமையின் காரணமாக அந்த கொடுக்கல் வாங்கல்களுக்குரிய இறுதிக் கொடுப்பனவு இறுதியாகச் செலுத்தப்பட்ட முற்பணத் தொகையின் பட்டியல் மாத்திரம் உறுதிச்சீட்டில் இணைக்கப்பட்டுள்ளது. மீண்டும் பெற்ற உறுதிப்படுத்தப்பட்ட பட்டியலின் பிரதி கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படுவதுடன் நிதி மோசடிகள் இடம்பெறவில்லை எனவும் இவ்வாறான தவறுகள் மீண்டும் ஏற்படாமல் இருப்பதற்கு ஆலோசனையும் வழங்கப்பட்டுள்ளது. | பெறப்பட்ட முற்பணத்தை முறையாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2023 சனவரி 27 ஆந் திகதிய இலக்கம் 01/2023 என்ற நிதி மற்றும் பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் பாதீட்டு சுற்றறிக்கயின் 06(இ) பந்தியின் பிரகாரம் அந்தந்த உத்தியோகத்தர்களினால் தகைமைகள் பூர்த்தி செய்வதற்காக பூர்த்தி செய்யப்படவேண்டிய கட்டாய பயிற்சியளித்தலுக்காக மாத்திரம் அந்த பயிற்சி சந்தர்ப்பம் வழங்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான தகைமைகளை பூர்த்தி செய்யாதிருந்த ஒருநாள் பயிற்சி செயலமர்வு 2023 | உத்தியோகத்தர்கள் சிலரின் தனிப்பட்ட காரணத்தின் அடிப்படையில் அந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு பங்குபற்றாதிருந்ததுடன் இவ்வாறான இயலளவு அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ள முக்கியத்துவம் தொடர்பாக அவர்களுக்கு அறிவித்து எதிர்காலத்தில் அவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்களுக்காக கட்டாயமாக பங்குபற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் ஆக்கபூர்வான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செப்தெம்பர் 23 ஆந் திகதி ஆரம்ப சேவை தொகுதிக்குரிய உத்தியோகத்தர்களுக் காக நடாத்தப் பட்டிருந்தது. அற்காக ரூபா 111,376 செலவிடப்பட்டிருந்ததுடன் ஆரம்ப சேவை உத்தியோகத்தர் 26 பேர்களுக்காக திட்டமிடப்பட்டிருந்த இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் 18 பேர் மாத்திரம் பங்குபற்றியமையால் 31 சதவீதமானவர்கள் பங்குபற்றியிருக்க வில்லை. | | |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 02/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 03 பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டிற்காகவும் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு மதிப்பீடு அமுல்படுத்துவதற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்க வேண்டியிருந்ததுடன் எதிர்வரும் ஆண்டிற்காண செயல் நடவடிக்கைத் திட்டம் நடப்பாண்டின் திசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் தயாரித்து பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெறவேண்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்காக அங்கீகாரம் 2023 பெப்ரவரி 14 ஆந் திகதி பெறப்பட்டிருந்தது. | கணக்காய்வுடன் இணங்குவதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான தாமதங்கள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்ட வழிகாட்டிகளுக்கு இணங்க செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### (ஆ) பெறுகைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 02/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 04 பந்தியின் பிரகாரம் சகல கணக்கீட்டு உத்தியோகத்தர்களினாலும் தமது நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் பணிகளின் பிரகாரம் எதிர்வரும் ஆண்டின் மீண்டெழும் மற்றும் மூலதன நிகழ்ச்சித் திட்டங்களை அடுல்படுத்துவதற்கான வருடாந்த பெறுகைத்திட்டம், நடப்பாண்டின் திசெம்பர் 10 ஆந் திகதிக்கு முன்னர் தயாரித்து அதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெற்று அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் விரிவான பெறுகைத்திட்டத்திற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் 2023 ஏப்ரல் 20 ஆந் திகதி பெறப்பட்டிருந்ததுடன் அது கணக்காய்விற்று 2023 மே 10 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வுடன் இணங்குவதுடன் விரிவாக பெறுகைத்திட்டம் மாத்திரம் தயாரித்தல் தாமதமாகியிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் பெறுகைத்திட்டம் தயாரித்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 01/2020 என்ற அரச நிதிச் சுற்றறிக்கையின் 11.1.6 பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு நிதியாண்டிலும் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கடந்த ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு | கணக்காய்வுடன் இணங்குகின்றோம். 2023 ஆம் ஆண்டில் பொருள் மெய்மையாய்வு அறிக்கை இயலுமான வரை கூடிய விரைவில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுவதுடன் 2022 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட பொருள் | சுற்றறிக்கையின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு அறிக்கை குறித்த காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறிக்கை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2024 மே 03 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு 2022 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் 08 மாத காலத்தின் பின்னர் 2023 திசெம்பர் 18 ஆந் திகதி கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | மெய்மையாய்வு அறிக்கைகள் மற்றும் பிரதான பொருட் பதிவேடுகளுக்கு இடையே காணப்பட்ட இணக்கமின்மைகளின் காரணமாக மீண்டும் மெய்மையாய்வு செய்ய வேண்டி ஏற்பட்டமையால் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வுக்கு வழங்குவதற்கு தாமதமடைந்திருந்தது. | |
| (ஆ) | மீளாய்வாண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி 08 வகையான பொருட்களில் 40 அலகுகள் பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் 09 வகையான பொருட்களில் 46 அலகுகளின் மிகையும் ஒரு பொருள் அலகில் பற்றாக்குறையும் காணப்பட்டது. | கணக்காய்வுடன் இணங்குகின்றோம். | பொருட்களை சரியாக பொருட் பதிவேடுகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 மற்றும் 881(ii) இன் பிரகாரம் அலுவலகத்தில் பிணை வைத்தல் மேற்கொள்ள வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்பு பெறப்பட்டிருக்கவில்லை. | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அந்த உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப்பணத்தை பெற்றுக்கொள்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்பை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அலுவலகத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 123 ஆக இருந்ததுடன் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 88 ஆனமையால் வெற்றிடமான ஊழியர் எண்ணிக்கை 35 அதாவது அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் 28 சதவீதம் ஆகும். ஆதில் சிரேஷ்ட நிலை வெற்றிடங்கள் 13 ஆனமையால் அலுவலகத்தின் செயலாற்றலுக்கு ஏதாவது தாக்கம் ஏற்படக்கூடியதாக இருந்தமை கணக்காய்வில் புறம்தள்ள முடியாது இருந்தது. | இலங்கை தகவல் தொலைத்தொடர்பு மற்றும் தொழில்நுட்ப சேவையின் உத்தியோகத்தர்களில் காணப்படுகின்ற அதிகளவான பற்றாக்குறையின் காரணமாக இந்த பதவிகளை நிரப்புதல் பிரச்சனைக்குரியதாக இருந்தது. சட்ட உத்தியோகத்தர் பதவிக்காக 2024.04.03 ஆந் திகதி முதல் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இரண்டாம் மற்றும் ஆரம்ப நிலையின் வெற்றிடப் பதவிகளுக்காக இனங்காணப்பட்ட உத்தியோகத்தர்களை இடம்மாற்றுதல் தொடர்பாக ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அத்தியாவசிய பதவிகளின் வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |